SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

# ஜனவரி 2016 பரீட்சை - AA2 மட்டம்

**(January 2016 Examination - AA2 Level)**

வினாக்களும் பரிந்துரைக்கப்பட்ட விடைகளும்

பாட இலக்கம் **: 25**

# வணிக சட்டமும் ஒழுக்கநெறியும்
# (BLE)

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

# இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

## AA2 பரீட்சை – ஜனவரி 2016

## (25) வணிக சட்டமும் ஒழுக்கநெறியும்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**நோக்க சோதனை வினாக்கள்:**

**பத்து (10) கட்டாயவினாக்கள்**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

### வினா ஒன்றிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

| வினா | விடை |
|---|---|
| 1.1 | (3) |
| 1.2 | (2) |
| 1.3 | (4) |
| 1.4 | (2) |
| 1.5 | (2) |
| 1.6 | (4) |
| 1.7 | (1) |
| 1.8 | தேசவழமைச்சட்டம்<br>கண்டியச் சட்டம்<br>இஸ்லாமியச் சட்டம்<br>ரோமன் டச்சு சட்டம் |
| 1.9 | நியதிச்சட்டங்கள்<br>ஒப்புரவுச்சட்டம்<br>நீதிமுறை முன்தீர்ப்பு<br>வழக்காறு<br>யூரிமார்களின் அபிப்பிராயங்கள்<br>சமயம்<br>சட்டவாக்கம் |
| 1.10 | சட்டரீதியான அணுகுமுறை (சட்டதிட்ட அடிப்படை)<br>தன்னிச்சையான அணுகுமுறை (சட்டக வேலை) |

**பிரிவு *A* இன் நிறைவு**



aat SRI LANKA

## பகுதி - B

**அனைத்து 5 வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.**
**(25 புள்ளிகள்)**

## இரண்டாம் வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

தரப்பினர்களுக்கிடையே வலிதான ஒப்பந்தம் இல்லை. ஏனெனில் ஒப்பந்தத்தின் விடயப்பொருளை இணங்காணல் தொடர்பாக ஒரு **ஒத்த தவறை கொண்டே தரப்பினர்கள் ஒப்பந்தத்திற்குள் ஈடுபட்டுள்ளனர்.** இதன் பொருள் யாதெனில் இரு தரப்பினர்களுமே ஒப்பந்தத்தின் மையப் பொருளை இணங்காண்பது தொடர்பாக வேறுபட்ட தவறுகளை மேற்கொண்டுள்ளனர். ஒப்பந்தத்தின் மையப்பொருளை இணங்காண்பது தொடர்பாக பரஸ்பர தவறுகள் இருக்குமாயின். அவ்வாறான ஒப்பந்தம் வலிதற்ற ஒப்பந்தமாக கருதப்படும். அதாவது ரவ்ப்பல்ஸ் எதிர் விச்செல்கவ் (*Raffles Vs Wichelhaus*)

இங்கு, சில்வா இரு படுக்கை அறையொன்றிற்கு கொடைமுனைவு செய்தார். சில்வா மூன்று அறைகள் கருதிச்சொல்கின்றார் எனக் கருதி டயஸ் ஏற்றுக்கொணடார். எனவே, இவ்வொப்பந்தம் வலிதற்றதாகியுள்ளது. ஏனெனில், ஒப்பந்தத்திற்கான ஒரு ஒத்த உடன்பாடு இருக்கவில்லை. இதனை பரஸ்பர ஒப்பந்தம் என கூறப்படும்.

## மூன்றாம் வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

**காசோலைக்கும் மாற்றுண்டியலுக்குமிடையிலான வேறுபாடுகள்.**

| காசோலை | மாற்றுண்டியல் |
|---|---|
| 1. பெறுபவர் எப்போதும் வங்கியாக இருத்தல் | 1. பெறுபவர் ஒரு வங்கியாகவோ அல்லது ஒரு தனிநபராகவோ இருக்க முடியும். |
| 2. கோரலின் மீது செலுத்தப்படும். | 2. கோரும்போது அல்லது ஒரு நிலையான அல்லது நிர்ணயிக்கப்பட்ட எதிர்காலத்தில் கொருக்க வேண்டி இருத்தல். |
| 3. குறுக்குக் கோடிடல் தொடர்பான விதிமுறைகள் பிரயோகிக்கப்படும். | 3. இந்த விதிகள் பிரயோகிககப்படுவதில்லை. |
| 4. நடைமுறைக்கணக்கை பேணுகின்ற ஒருவரே வரையமுடியும். | 4. எவரும் / எந்த ஒரு நபரும் வரையலாம். |
| 5. காசொலைகள் ஏற்பிற்காக சமர்ப்பிக்கப்படுவதில்லை | 5. ஏற்புக்காக சமர்ப்பிக்கப்படும். |
| 6. பொதுவாக உள் நாட்டில் பயன் படுத்தப்படும் | 6. சர்வதேச வியாபாரத்தில் பிரபல்யமானது. |

## நான்காம் வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

முகவர் மற்றும் முதல்வர் ஆகியோருக்கிடையிலான உறவை பின்வரும் முறைகளில் உருவாக்கிக் கொள்ள முடியும்.

1. வெளிப்படையான உடன்படிக்கை.
2. உட்கிடையான உடன்படிக்கை.
3. முக்கியத்துவத்தினால் முகாவராண்மை.

4. முரண் தடையிலான முகராண்மை
5. வவாக்கல் ஊடாக உருவாகின்ற முகராண்மை.
6. திருமணத்திலான மற்றும் இணைந்து வாழதல் மூலமாக.

## ஐந்தாம் வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a) i. சுமைச்சீட்டு (Bill of lading )
   ii. கடல் காப்புறுதி பூட்கை
   iii. விற்பனைப்பட்டியல்

b) சுமைச்சீட்டு

இது கடல் வழியாக பொருட்களைக் கொண்டு செல்வது குறித்து ஒரு ஒப்பந்தமாகப் பயன்படுத்தப்படும்.

கடல் காப்புறுதி பூட்கை

இது காப்புறுதியாளர் கடல் போக்குவரத்திலான நட்டங்களுக்கு எதிராக, அதே அளவிற்கு காப்புறுதி செய்பவரிடமிருந்து பொறுப்பேற்பதற்கான ஒரு ஒப்பந்தமாகும்.

இது காப்புறுதி ஒப்பந்தத்தை குறித்துப் பயன்படுத்தப்படும்.

விற்பனைப்பட்டியல்

இது விற்பனை ஒப்பந்தத்தினை நிரூபிப்பதாக அமையும்.

## ஆறாம் வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

1. வியாபாரக் குறியானது. எழுத்து, இலக்கம், பெயர், நிறம், வடிவம், கையொப்பம் என்பவற்றினை உள்ளடக்கும்.
2. ஆனால் இவையாவும் பதிவுசெய்யத்தக்க வியாபாரக் குறிகளல்ல. சில வரையறைகள் பிரிவு 103 மற்றும் 104 என்பவற்றால் விதிக்கப்பட்டுள்ளன.
3. இதன்படி பெயரானது ஒரு தனிசிறப்புடையதான ஒரு வியாபாரக்குறியாக பதிவுசெய்யப்பட முடியும்.
4. அத்துடன் பெயரானது முதற்பெயரை அல்லது இறுதிப்பெயரை உள்ளடக்கியதாக அல்லது சிறப்பு பெயர் இருத்தல் வேண்டும்.
5. குடும்ப அல்லது உப பெயர்கள் பொதுவாக பதிவுசெய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

**பிரிவு *B* இன் நிறைவு**

## பகுதி - C

**அனைத்து மூன்று (3) வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.**
**(30 புள்ளிகள்)**

## ஏழாம் வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a)

i. 8% த்தில் ஊழியர் சேமலாபநிதி (EPF)
ii. உங்களின் ஊதியத்திற்கேற்ப செலத்துக (PAYE)
iii. முத்திரை வரி
iv. தொழில் தருனர் செவ்வந்திக்கு செலுத்தப்பட்ட ஏதேனும் முற்பணம்
v. செவ்வந்தியின் வேண்டுகோளுக்கு இணங்க மூன்றாம் தரப்பினருக்கு மேற்கொள்ளப்பட்ட ஏனைய முற்பணங்கள்.
vi. உணவுச் செலவீடுகள்
vii. பாதுகாப்பு வைப்புக்கள்
viii. வாடகை
ix. இழப்பீட்டுத்தொகை

b)

i. வழமையான 7 நாட்கள்
ii. வருடாந்தம் 14 நாட்கள்
iii. பிரசவத்திற்கு முன்னும் பின்னரும் எடுக்கப்பட்ட 84 நாட்கள்.

aat SRI LANKA

## எட்டாம் வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்.

a) இது வாடகைக்கொள்வனவு ஒப்பந்தமாகும். வாடகை அல்லது குத்தகை ஒப்பந்தமானது பொருள் விற்பனை கட்டளைச்சட்டத்திற்கு உட்பட்டவையல்ல. ஏனெனில் அவை பொருள்விற்பனை ஒப்பந்தமல்ல.

விற்பனையாள்ரோ ஒருவரோ மற்றும் காணப்பகுவதில்லை பங்காளர்கள் உரிமையாளர் மறறும் வாடகைக்கு கொள்வனாவாளர்

விசேடமாக அங்கு ஆதனமாற்றீடு அல்லது ஆகக் குறைந்தது எதிர்காலத்தில் பொருள் ஆதனத்தின் உரித்தை மாற்றுவதற்கான ஒப்பநதம் இல்லை. விஷேடமாக ஒரு சொத்தை கொள்வணவு செய்தல் தொடர்பில் அல்லது குறைந்தபட்சம் (சொந்தம்) சொந்தத்தை கைமாற்றுவாதற்கான உடன்படிக்கை இல்லை

இது மூன்றாம் வருட இறுதியில் கொள்வனவு செய்வதற்கான அபிப்பிராயத்தை மட்டுமே கொண்டதாகும.

எனவே கொடுக்கல்வாங்கல்கள் பொருள் விற்பனை கட்டளைச் சட்டத்தினால் அல்லது 1982 ஆம் ஆண்டு 29 ஆம் இலக்க நுகர்வோர் கடன் சட்டத்தால் ஆட்சிப்படுத்தப்படுவதில்லை.

b) மிஹிரனின் மனைவி AR காப்புறுதிக் கம்பனியிடமிருந்து இழப்பீட்டைக் கோருவதற்கான உரித்தினைக் கொண்டவரல்ல.

காப்புறுதி கோட்பாடுகள் சிலவே உள்ளன. ஆவையாவன, காப்புறுதி செய்யத்தக்க உரிமை, உச்ச நம்பகத்தன்மை, நட்டஈடுசெய்தல், பங்களிப்பு, பதிலாள் வைப்பு மற்றும் அண்மிய த்தத்துவம்.

எனவே இக்காட்சிப்படலத்தில், ஒப்பந்தத்தில் ஈடுபடும் தருணத்தில், மிஹிரன் உச்ச நம்பிக்கைத் தத்துவத்தை மீறியுள்ளார். இது ஒப்பந்தத்திற்குள் ஈடுபடும் போது தோற்றம் பெற்றிருத்தல் வேண்டும்.

உச்ச நம்பிக்கைத்தன்மை தத்துவம் என்பது ஒருவர் இன்னுமொருவரைக கேட்காத போதும் ஒவ்வொரு தரப்பினரும் மற்ற தரப்பினருக்கு முக்கியத்துவமான தகவல்களை வெளிப்படுத்தல் வேண்டும் என்பதாகும்.

இந்த விடயத்தில், மிஹிரன் தனது மோசமான உடல் நிலைமை மற்றும் ஏனைய காப்புறுதிக்கம்பனிகளால் அவரது ஆயட்காப்புறுதிற்கான விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டமை என்பன பற்றிய உண்மைகளை மறைத்துள்ளார்.

இதன் காரணமாக, மிஹிரன் மற்றும் AR காப்புறுதிக்கம்பனிக்கும் இடையில் தோன்றியுள்ள ஒப்பந்தம் ஒரு பிணிக்கும் ஒப்பந்தமாகக் கொள்ளப்படவில்லை.

எனவே, மிஹிரனின் மனைவி AR காப்புறுதிக் கம்பனியிடமிருந்து இழப்பீட்டைக் கோருவதற்கான உரித்தினைக் கொண்டவரல்ல.

## ஒன்பதாம் வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்.

**அநுகூலங்கள்**

1. இலகுவாக உருவாக்கிக்கொள்ளல்
2. குறைந்தளவிலான சம்பிரதாய விதிமுறைகள்.
3. குறைந்தளவிலான சட்டத் தேவைப்பாடுகள்.
4. கம்பனியுடன் ஒப்பிடும்போது குறைந்தளவிலான நிதியியல் அறிக்கையிடல் தேவைப்பாடுகள்.
5. கம்பனியொன்றுக்கு ஆரம்பிப்பதற்க்கு தேவையான முதலிட்டை விட குறைவானது.

**பிரதிகூலங்கள்**

1. பங்காளர்களின் வரையறுக்கப்படாத பொறுப்பு.
2. நீண்டகால நிலையற்ற தண்மை
3. தனித்து பிரிந்திருக்காத்தன்மை
4. சட்டரீதியான அந்தஸ்தைக் கொண்டிராமை.

**பிரிவு *C* இன் நிறைவு**

## பகுதி - D

**இப்பகுதியுலுள்ள வினாவுக்கு விடையளித்தல் வேண்டும்.**
**(25 புள்ளிகள்)**

## பத்தாம் வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a) இங்கு **அமால்** மற்றும் **பொத்ஷப்புவ** ஆகியோருக்கிடையே பொருள் விற்பனை ஒப்பந்தம் ஒன்று உள்ளது. பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்திற்கிணங்க உட்கிடையான நிபந்தனைகள் பின்வருமாறு:

- விற்பனையாளருக்கு விறபனை செய்வதற்கான உரிமை இருத்தல் வேண்டும்.
- மாதிரியுடன் பொருட்கள் இணங்குதல் வேண்டும்.
- விவரணத்துடன் பொருட்கள் இணங்குதல் வேண்டும்.
- வாங்குவோரின் நோக்கத்திற்கு பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.

அதற்கிணங்க இவ்வழக்கில், **அமால்** பொருட்கொள்வனவிற்கான (கணிப்பான்கள்) நோக்கத்தை **பொத்ஷப்புவின்** உத்தியோகத்தருக்கு அறிவித்துள்ளார்.

இந் நிபந்தனைகளை உட்கிடையாக்குவதற்கு சில தேவைகள் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

- நோக்கம் அறிவிக்கப்படல் வேண்டும்.
- பொருட்களை வாங்குபவர் ஒரு நுகர்வோராக இருத்தல் வேண்டும.
- விற்பனையானது விற்பனையாளரின் சாதாரண வியாபார நடவடிக்கைக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- விற்பனையாளரின் திறன்கள் மற்றும் நியாயப்படுத்தலில் வாங்குபவர் தங்கியிருத்தல் வேண்டும்.

இங்கு, அமால் வெளிப்படையாக தனது நோக்கத்தை பொத்ஷப்புவின் உத்தியோகத்தருக்கு அறிவித்துள்ளார்.

ஆனால் கணிப்பான்கள்அமாலின் நோக்கத்திற்கு இணங்க இருக்கவில்லை.

எனவே, இங்கு உட்கிடையான நிபந்தனை முறிவொன்று உள்ளது.

இதற்கிணங்க, அமால் ஒப்பந்தத்தை இரத்து செய்து பணமானது மீளச் செலுத்தப்படுதல் வேண்டும்.

b) இங்கு, **அமாலுக்கும் பொத்ஷப்புவிறகும்** உடன்படிக்கையொன்று உள்ளது.

ஓப்பந்தமொன்று வேறுபட்ட நிபந்தனை விதிகளைக் கொண்டுள்ளன.

அவ்வாறான நிபந்தனையொன்று பிரேத்தியாகமானது / விதிவிலக்கானது / விலக்கப்பட்டதான நிபந்தனைகள்.

இவ்வழக்கில், "முகாமை பொறுப்பல்ல ……." என்ற வாசகம் விலகளப்பு வாசகமாக அவ்வாசகத்தினால் முகாமைத்துவம் கட்டுபட்டதுமான.

இப்பபோதுள்ள வினா என்ன வெனில் முகாமையானது சொல்லப்பட்ட சரத்திற்குட்பட்டதா என்பதாகும்.

பொதுவாக, நீதிமன்றங்கள் இவ்வாறான சரத்துக்களை ஊக்குவிப்பதில்லை.

ஆனால், பங்குதாரர்கள் அவற்றை ஒரு வலிதான நிபந்தனையாக நன்றாக அறிந்திருப்பின் ஏற்றுக்கொள்ளலாம்.

ஒரு வலிதான சரத்தாக இணங்காண்பதற்கு பங்காளரகள் விதிவிலக்கான வாசகப் பற்றி அறிந்திருக்க வேண்டும். ஒப்பந்தம் ஒன்றிற்குள் நுழையும் போது அல்லது அவ்வாறான செய்முறையில் அவரகள் ஈடுபடும்போது அவர்களுக்கிடையே தெரிவித்துக் கொள்ளல் வேண்டும்.

இவ்வழக்கில் சினிமா மண்டபத்திற்குள் நுழைந்தபின் பின்னரே A விலகளிப்பு வாசகம் ப்பற்றி அறிந்திருந்தார். அதாவது ஒப்பந்தம் செய்ததின் பின்னர்.

எனவே, இங்கு விலகளிப்பு வாசகம் வலிதானறு அல்ல.

A இழப்பீட்டை கோர முடியும்.

aat SRI LANKA

**பிரிவு *D* இன் நிறைவு**

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".
The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2014 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*
*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*